www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

9 Register No. 91 41

# அரையாண்டுத் தேர்வு – 2024

நேரம் : 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 100

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். சரியான விடையினைத் தெரிவுடன் எடுத்து எழுதுக. 15x1=15

1. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
இவ்வடிகளில் அதனோடு என்பது எதைக் குறிக்கிறது?
அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்

2. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு.
அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

3. நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

4. ஐம்பெருங்குழு, எண்பேராயம் சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

5. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ..............
அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி இ) திரிபுவன வீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

6. நச்சிலைவேல் கோக்கோதை நாடு நல்யானைக் கோக்கிள்ளி நாடு இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே,
அ) பாண்டியநாடு, சேர நாடு ஆ) சோழ நாடு, சேர நாடு
இ) சேர நாடு, சோழ நாடு ஈ) சோழ நாடு, பாண்டியநாடு

7. பூவாது காய்க்கும், மலர்க்கை அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

8. இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை............
அ) போட்டனர் ஆ) அமைத்தனர் இ) வேய்ந்தனர் ஈ) கட்டினர்

9. வாழைமரம் என்பது ......... புணர்ச்சி
அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

10. ஐந்து சால்புகளில் இரண்டு
அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்
இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

11. ஏறு தழுவுதல் பற்றிக் கூறும் சங்க இலக்கிய நூல்
அ) கலித்தொகை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) பரிபாடல்

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடைதருக.

வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மணல் துருத்தியும் தாழ்பூந் துறைகளும்
தேவரும் மக்களும் ஒத்துடன் திரிதரும்
நாலேழ் நாளினும் நன்கறிந்தீர் என

12. இப்பாடல் இடம்பெற்ற நூல்.
அ) பெரியபுராணம் ஆ) மணிமேகலை இ) சீவக சிந்தாமணி ஈ) சிறுபஞ்சமூலம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

13. இப்பாடலின் ஆசிரியர்.
அ) சீத்தலைச் சாத்தனார் ஆ) திருத்தக்கத் தேவர் இ) காரியாசான் ஈ) சேக்கிழார்
14. பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களைத் தேர்ந்தெடுக்க.
அ) நாலேழ்-நாளினும் ஆ) தேவரும்-மக்களும்
இ) வெண்மணற்-தண்மணல் ஈ) தண்மணல்-துருத்தியும்
15. தண்மணல் - இலக்கணக் குறிப்பு தருக.
அ) உரிச்சொல்தொடர் ஆ) வினைத்தொகை இ) எண்ணும்மை ஈ) பண்புத்தொகை

## பகுதி - II

### பிரிவு-அ

I. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 21வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும். 4X2=8

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர் கால்டுவெல்.
ஆ) சோழர்காலம் செப்புத்திருமேனிகளின் பொற்காலம் என்று அழைக்கப்படும்.
17. 'கூவல்' என்று அழைக்கப்படுவது எது?
18. கருக்கொண்ட பச்சைப்பாம்பு, எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?
19. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.
20. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?
21. "மிகுதியான்" எனத்தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு-ஆ

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5X2=10

22. பிழை நீக்கி எழுதுக.
அ) பவளவிழிதான் பரிசு உரியவள் ஆ) குழலியும் பாடத் தெரியும்
23. பகுபத உறுப்பிலக்கணம் தருக. உணர்ந்த
24. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
அ) கண்ணும் கருத்தும் ஆ) முதலும் முடிவும்
25. கலைச்சொல் தருக. அ) Treasury ஆ) Water Management
26. வீணையோடு வந்தாள், கிளியே பேசு தொடரின் வகையைச் சுட்டுக.
27. அரபு எண்களிலும், தமிழ் எண்களிலும் எழுதுக.
அ) உங்கள் இல்லத்தின் எண் ....................
ஆ) வாக்களிக்க ............. வயது பூர்த்தியாக வேண்டும்.
28. ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக (கால், அகல்)
அ) எண்ணெய் ஊற்றி ......... விளக்கு ஏற்றியவுடன் இடத்தைவிட்டு ........
ஆ) எனக்கு .......... பங்கு பிரித்துக் கொடுக்க வா! கீழே ஈரம்: பார்த்து உன் ........ ஐ வை.

## பகுதி - III

### பிரிவு -அ

I. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2x3=6

29. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிறதிராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?
30. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.
31. உரையைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
கற்சிற்பங்கள் அமைக்கும் கலை சோழர் காலத்தில் விரைவாக வளர்ச்சி பெற்றது. முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரியகோவில், முதலாம் இராசேந்திர சோழன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம், இரண்டாம் இராசராசன் எழுப்பிய தாராசுரம் ஐராவதீசுவரர் கோவில், மூன்றாம் குலோத்துங்கச் சோழன் அமைத்த திரிபுவன வீரேசுவரம் கோவில்

போன்றவை சோழர்காலச் சிற்பக்கலையின் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

அ) சோழர் காலத்தில் விரைவாக வளர்ச்சி பெற்றது எது?

ஆ) தாராசுரம் ஐராவதீசுவரர் கோவிலை எழுப்பியவர் யார்?

இ) பத்திக்கு ஏற்ற தலைப்புத் தருக.

பிரிவு-ஆ

II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 34 வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும். 2x3=6

32. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

33. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?

34. ''நீர் இன்று'' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக. (அல்லது)

''பூவாது'' எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் பாடலை எழுதுக.

பிரிவு-இ

III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2x3=6

35. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

36. கைபிடி, கைப்பிடி சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

37. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை. -இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி - IV

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5x5=25

38. (அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)


(ஆ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

39. (அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் தமிழ் ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

(அல்லது)

(ஆ) உங்களின் நண்பர். பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் ஒருவரின் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. அ) கொடுக்கப்பட்ட தகவல்களைக்கொண்டு தன்விவரப்படிவம் தயாரிக்க.
(பெயர், பெற்றோர் பெயர், பிறந்த தேதி, பாலினம், தெரிந்த மொழிகள்)

(அல்லது)

ஆ) கவிதை படைக்க : அன்பின் வழி



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

42. மொழிபெயர்க்க.

அ) 1. A nation's culture resides in the hearts and in the soul of its people - Mahatma Gandhi
2. You have to dream before your dreams can come true - A.P.J. Abdul Kalam
3. The biggest problem is the lack of love and charity - Mother Teresa

(அல்லது)

ஆ) சமூகத்திற்கு நீங்கள் செய்யும் பணிகள் குறித்து எழுதுக.

பகுதி - V 3x8=24

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

43. அ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க

44. அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

(அல்லது)

ஆ) இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி' கதையின் மூலமாக விளக்குக.

45. அ) குறிப்புகளைக்கொண்டு கட்டுரை எழுதுக.
முன்னுரை - சாலைப் பாதுகாப்பு - சாலைவகைகள் - வேகக் கட்டுப்பாடு பயணிக்கும்போது நினைவில் கொள்ள வேண்டியவை - முடிவுரை

(அல்லது)

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

www.Padasalai.Net